செ. கு. எண்: 299 நாள்: 13.11.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 13.11.2013

சென்னை பெருநகர காவல், புனித தோமையர் மலை, ஆயுதப்படை 'C' நிறுமத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. I.பாண்டியராஜன் அவர்கள் 11.9.2013 அன்று ஏற்பட்ட மாரடைப்பால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 13.9.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. E.திருநாவுக்கரசு அவர்கள் 13.9.2013 அன்று கைலாசப்பேரி அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது நிலைதடுமாறி கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், துறைமுகம் மிதக்கும் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. முத்து அவர்கள் 13.9.2013 அன்று ஏற்பட்ட மாரடைப்பால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 14.9.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தருமபுரி மாவட்டம், மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. செல்வம் அவர்கள் 15.9.2013 அன்று ராமக்காள் ஏரி அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், கோயம்பேடு பேருந்து நிலைய காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ராஜசேகரன் அவர்கள் 16.9.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் (Tamil Nadu Police Academy) இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சதீஷ்குமார் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 16.9.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், அலங்கியம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. அன்புசெல்வம் அவர்கள் 18.9.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் முத்து, செல்வம், ராஜசேகரன், அன்புசெல்வம்; தலைமைக் காவலர் திருநாவுக்கரசு; இரண்டாம் நிலைக் காவலர் சதீஷ்குமார் மற்றும் காவலர் பாண்டியராஜன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் முத்து, ராஜசேகரன், அன்புசெல்வம், காவலர் பாண்டியராஜன்; சாலை விபத்தில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வம் தலைமைக் காவலர் திருநாவுக்கரசு; உடல்நலக் குறைவால் காலமான இரண்டாம் நிலைக் காவலர் சதீஷ்குமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**